**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.332/2015 வா.சா.2 ரங்கநாயகம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 26.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

**10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்து உள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு படித்து உள்ளேன். என் சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆனது. நான் உள்ளூரிலேயே திருமணம் செய்து கொண்டேனா என்றால் ஆமாம்.

2) திருமணத்திற்கு பின் கணவரின் குலதெய்வத்தை தான் மனைவியின் குலதெய்வமாக எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். என் கணவருக்கு குரும்பம்பாளைத்தில் உள்ள அருள்மிகு வீரகுமார் தான் குலதெய்வம் என்றால் சரிதான். சுப்பைய தேவரின் உடன் பிறந்தவர் ராமசாமி தேவர் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மேற்படி ராமசாமி வழி வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி சுப்பைய தேவர் மற்றும் ராமசாமி தேவர் தகப்பனார் பெயர் பழனிதேவர் என்றால் சரிதான். பழனிதேவர் காலத்தில் இருந்தே எங்கள் ஊரில் உள்ள வழக்கு கோவில்கள் உள்ளன என்றால் சரிதான். பழனிதேவர் வாரிசுகள் அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பழனிதேவர் முதல் அவரது வாரிசுகள் அனைவரும் நாளது தேதி வரை வழக்கு கோவில்களை தான் குலதெய்வமாக வழிபடுகின்றனர் என்றால் சரிதான்.

3) வழக்கு கோவில்களை குலதெய்வமாக வழிபடுவோர் சுமார் 75-80 குடும்பங்கள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் வசித்து வருகின்றனர். குலதெய்வம் என்றாலே அதனை வழிபடும் குடும்பங்கள் ஆண்டுக்கு ஒரு முறை ஒன்று கூடி வழிபடுவது வழக்கம் என்றால் சரிதான். ஆண்டுதோறும் ஆவணி மாதம் அவ்வாறு வழக்கு கோவில்களில் வழிபடுவது வழக்கம் என்றால் சரிதான். அவ்விழா 3-5 நாட்கள் நடைபெறும் என்றால் சரிதான். அவ்விழாவின் சிறப்பு அம்சமாக அருள்மிகு காமாட்சி அம்மனுக்கு திருமணம் நடத்தி உற்சவமாக ஊரை சுற்றி உலா எடுத்து வருவது வழக்கம் என்றால் சரிதான்.

4) அவ்வாறு விழா சமயத்தின் போது மேற்படி குடும்பங்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாக வசூலித்து அதனை கொண்டும் விழா செலவுகளை செய்வர் என்றால் சரிதான். விழா காலத்தில் வெளியூரில் இருந்து சிவாச்சாரியர் போன்ற புரோகிதர்களை அழைத்து வந்து திருக்கல்யாணம் முதலிய பூஜை செய்வர் என்றால் சரிதான். விழா சமயத்தில் அன்னதானம் நடைபெறும் என்றால் சரிதான். இவ்வாறு விழா சிறப்பாக நடைபெறுவதால் அதற்கு அதிக செலவுகள் ஏற்படும் என்றால் சரிதான். அவ்வாறு ஆகும் செலவுகளை மேற்கொள்ள விரும்பும் பங்காளிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப நன்கொடைகள் வழங்குவர் என்றால் சரியல்ல.

5) விழா சமயத்தில் அனைவருக்கும் மஞ்சள் நிறத்தில் நோட்டீஸ் வழங்குவர் என்றால் சரிதான். வாதி வழக்கு கோவில்களை நிர்வகிப்பதாக நான் சாட்சியம் அளித்து உள்ள நிலையில் அவர் குழு அமைத்து அதன் தலைவர் , செயலாளர் போன்ற பொறுப்பில் இருந்து நிர்வகிக்கிறாரா அல்லது அந்த குடும்ப உறுப்பினர் என்ற முறையில் மட்டும் நிர்வகிக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆண்டுதோறும் விழா நடத்தும் முன்பு முக்கிய

பங்காளிகள் அனைவரும் கூட்டம் போட்டு கலந்து பேசி அதன் பின் தான் விழா பற்றிய முடிவுகளை எடுப்பர் என்றால் சரிதான்.

6) கோவில் சாவி பூசாரி வசம் தான் இருக்கும் என்றும் அவரை அணுகினால் அவர் வந்து கோவிலை திறந்து பூசை செய்து விட்டு போவார் என்றும் சொன்னால் சரிதான். நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் வாதி மட்டும் தான் வழக்கு கோவில்களை நிர்வகிப்பதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் என் சாட்சிய வாக்குமூலத்தில் சுப்பைய தேவர் இறப்பிற்கு பின் வாதியும் 6 முதல் 8 பிரதிவாதிகளும் மட்டும் தான் வழக்கு கோவில்களை நிர்வகிப்பதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பழனிதேவர் வழக்கு கோவில் நிர்வாகம் தன் வாரிசுகள் அனைவரும் அனுசரித்து செய்ய வேண்டும் என விரும்பியதால் சுப்பைய தேவர் வாரிசுகளும் ராமசாமி தேவர் வாரிசுகளும் சேர்ந்து தான் வழக்கு கோவில் நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றனர் என்றால் சரியல்ல. சுப்பைய தேவர் வாரிசுகள் மட்டுமே கோவிலை நிர்வகிக்கின்றனர்.

7) என் கணவரும் வாதியும் நல்ல நெருங்கிய பழக்கம் உடையவர்கள் என்றால் சரிதான். வாதிக்கு என் கணவர் நெருங்கியவர் என்பதால் எனக்கு தெரியாத சங்கதிகளை பொய்யாக என் மூலம் சாட்சியம் அளிக்க வைத்து உள்ளார் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**(10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை படி அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிது.)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-( மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி